DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, TIRUNELVELI.

Spl. S. C. NO. 64/2025

Deposition of Witness for Prosecution :: **P.W.6**

பெயர்	–	**சாம்சன்**
தந்தை பெயர்	–	**எட்வர்டு**
கிராமம்	–	**வலசைகாரன்விளை**
தாலுகா	–	**ஸ்ரீவைகுண்டம்**
தொழில்	–	**காவல் ஆய்வாளர்**
வயது	–	51

Solemnly affirmed by Grade I Bench Clerk Tmt.S.Nageswari in accordance with the Provisions of Act X of 1873 on **the 06th day of July 2026.**

(Accused not present. Petition filed u/s.317 Crpc and allowed.)

(As per Hon'ble High Court, Madras R.O.C. No.65929-A/2022/F1 P.Dis. No.17/2023 dated 23.01.2023)

முதல் விசாரணை

நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் காவல்துறை கட்டுப்பாட்டு அறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திருநெல்வேலி தாலுகா காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது 01.09.2014 ம் தேதி 10 மணிக்கு நிலைய உதவி ஆய்வாளர் மாரிசெல்வி என்பவர் 20 சாந்து சட்டி மணலுடன் கூடிய மாட்டுவண்டியுடன் கொடுத்த தனிஅறிக்கையை பெற்று நிலைய குற்ற எண்.244/2014 சட்டப் பிரிவுகள் 379 இதச மற்றும் 3 of TNPPDL Act படி

Uploaded on 06.07.2026

வழக்கு பதிவு செய்து வழக்கு சம்பந்தப்பட்ட நகல்களை உயரதிகாரிகளுக்கு அனுப்பியும், அதன் அசலை நீதிமன்றத்திற்கு

அனுப்பியும், விசாரணை நகலை எனது பார்வைக்கு வைத்ததை பெற்றுக் கொண்டேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3. அன்றையதினம் 11 மணிக்கு சம்பவ இடமான திருமலைக்கொழுந்துபுரம் தாமிரபரணி ஆற்றின் கரையில் சாட்சிகள் சுப்பிரமணியன், ஆறுமுககனி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசர் அ.சா.ஆ.4. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5. மேற்படி பார்வை மகசர் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி மாட்டுவண்டியை பெண் சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார். அதனை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 91 அ.சா.ஆ.6. பின்னர் சாட்சிகள் உதவி ஆய்வாளர் மாரிசெல்வி, சிறப்பு உதவி ஆய்வாளர் ஸ்டீபன்சன்சாம்ராஜ், காவலர் செல்வகுமார் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் கைப்பற்றப்பட்ட மணலினை நீதிமன்ற உத்தரவுப்படி பாளையங்கோட்டை தாசில்தார் அவர்களிடம் 27.09.2014 ம் தேதி ஒப்படைத்து அத்தாட்சி பெற்றேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.7. பின்னர் 10.12.2014 ம் தேதி இவ்வழக்கின் சட்டப் பிரிவுகளை 379 இதச மற்றும் 3 of TNPPDL Act லிருந்து சட்டப் பிரிவு 379 இதசவாக மாற்றம் செய்து அந்த அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8. பின்னர் எதிரி மீது சட்டப் பிரிவு 379 இதசபடி குற்ற இறுதி அறிக்கை தாக்கல்

Uploaded on 06.07.2026

செய்தேன். அ.சா.4, அ.சா.5 ஆகியோர்களை நான் விசாரணை செய்தபோது சொன்ன விவரங்களைத் தான் வாக்குமூலமாக பதிவு செய்தேன்.

3

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–

பொதுவாக குற்ற வழக்கில் பொருட்களை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றுவார்கள் என்பது சரிதான். இந்த வழக்கில் அத்தாட்சி தயார் செய்யவில்லை என்றால் சரிதான். காவலர்களுக்கு பாக்கெட் டைரி உண்டு. அந்த பாக்கெட் டைரியில் அவர்களது தினசரி பணிகள் குறித்து குறித்து வைக்கப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக சாட்சிகளின் பாக்கெட் டைரியை நான் பார்வையிடவில்லை. மேற்படி பாக்கெட் டைரி இந்த வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் தான் அதனை நான் பார்வையிடவில்லை என்றும், ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பொதுவாக ரோல்கால் முடிந்த பிறகு தான் அன்றைய பணி ஒதுக்கீடு செய்யப்படும் என்றால் சரியல்ல. அவசர சமயங்களில் தனியாக ஏற்கனவே பணி நியமித்திருப்போம். இந்த வழக்கில் உதவி ஆய்வாளர், சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் காவலர்களுக்கு முந்தைய நாளே சிறப்பு பணி அமர்த்தப்பட்டது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. சம்பவ தினத்தில் மேற்சொன்ன சாட்சிகள் ரோல்காலில் கலந்து கொண்டார்களா என்று என்னால் சொல்ல முடியாது. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மாட்டுவண்டியை காவல்நிலையத்திற்கு யார் கொண்டு வந்தது என்பது பற்றி விசாரிக்கவில்லை. மணலை அள்ள பயன்படுத்தும் மண்வெட்டி, சட்டி ஆகியவற்றை இந்த வழக்கில் கைப்பற்றவில்லை என்றால் எதிரி ஆற்றில்

Uploaded on 06.07.2026

குதித்து ஓடிவிட்டார். எதிரி ஓடும்போது மண்வெட்டி, சட்டி ஆகியவற்றை கொண்டு சென்றதாக சாட்சிகள் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் பெயரை யாரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டோம் என்று இந்த

வழக்கில் சொல்லவில்லை என்றால் தகவலாளி பெயரை குறிப்பிடுவதில்லை. யாரும் எதிரியின் பெயரை குறிப்பிடவில்லை என்றும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் தனிநபர்களை சாட்சியாக போடவில்லை என்றால் சரிதான். நான் உதவி ஆய்வாளரிடம் இருந்து தனிஅறிக்கையை பெற்று முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ததாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சான்று பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. எதிரி விவசாய வேலைக்கு பயன்படுத்தும் மாட்டுவண்டியை எதிரியின் வீட்டில் இருந்து எடுத்து வந்து காவல்நிலைய புள்ளி விவர கணக்கிற்காக இந்த வழக்கை எதிரி மீது பொய்யாக பதிவு செய்துள்ளேன் என்றும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தம் இல்லை என்றும், எனது விசாரணை ஒருதலைபட்சமானது என்றும், சாட்சிகளை நான் சரிவர விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக இந்த வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை .

Uploaded on 06.07.2026